# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2289/02 – 2022 ජූලි මස 18 වැනි සඳුදා – 2022.07.18

*2289/02 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2022 ஆம் ஆண்டின் 132 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 2/5/1/89/STP/219.
பி. செ. குறிப்பு இல. : 4/1/2/18.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர், நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத் தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தி யோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னான்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, யுன்.30

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், குருநாகல்.

2. **காணியின் விபரம்** : வடமேல் மாகாணம், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில், பிரிவு இல. 5, பொல்அத்தாப் பிட்டிய குருநாகல் மா நகர சபை எல்லையில் சிறு பிரிவில், பொல்அத்தாப்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 1998.04.10 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட கு. 1940 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரிக்கப்பட்ட கீழ்வரும் எல்லைகளுள் அமைந்த காணித் துண்டின் எல்லைகள்:

1. **துண்டு இல. 1 - பொல்அத்தாபிட்டிய - விஸ்தீரணம் : 0.5033 ஹெக்டயார்**

வடக்கு: ஆ.வ.கு. 1588 இல் துண்டு இல. 67 மற்றும் 68; கிழக்கு: ஆ.வ.கு. 1588 இல் துண்டு இல. 68 மற்றும் ஆ.வ.கு 801 இல் துண்டு இல. 1; தெற்கு: ஆ.வ.கு. 801 இல் துண்டு இல. 1; மேற்கு: ஆ.வ.கு. 801 இல் துண்டு இல. 1.

EOG 07-0076